**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.60/2026**

**PW - 4**

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ்பாபு ( **LW. 5)** |
| Father's / Husband Name | : | த/பெ.சம்பத் |
| Village | : | கொண்டங்காட்டுர் |
| Taluk | : | நாமக்கல் |
| Calling | : | வெல்டர் |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026** தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மேற்சொன்ன முகவரில் குடியிருந்து வெல்டர் வேலை செய்து வருகிறேன். கடந்த 13.12.2025 ம் தேதி மதியம் 01.30 – 02.00 மணியளவில் நான் மதியம் உணவு அருந்துவதற்காக நான் பணிபுரியும் இடத்தில் இருந்து வீட்டிற்கு செல்ல சென்றுகொண்டிருந்தேன். ஒரு சண்டை வழக்கு சம்மநதமாக மாணிக்கம்பாளையத்தில் உள்ள அரசு பள்ளி அருகே போலிசார் படம் வரைந்து கொண்டிந்தார்கள். அது சம்மந்தமாக எழுதிய தாளில் நானும், கார்த்தி என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. **அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. என்ன சண்டை என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தற்போது நினைவில்லை. புகார்தாரர் நித்யா தான் என்னை சாட்சி சொல்ல நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல, போலிசார் அழைத்து வந்தார்கள். போலீசார் சம்பவம் குறித்து வரைபடம் வரைந்த ரோடானது தென்வடல் ரோடா என்றால் கிழக்கு மேற்கு ரோடாகும். நான் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும், புகார்தாரர் எனது உறவினர் என்பதால் பார்வை மகஜரில் காவல் நிலையத்தில் வைத்து

கையொப்பம் செய்து விட்டு, தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**